[2008 நவம்பர் 12

20—

விடுதி வசதி

***1526—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள பட்டியல் சாதியினருக்கான மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளில் போதுமான இடவசதியை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் 7 அரசினர் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அந்தப் பள்ளிகளில் படிக்கக்கூடிய ஆதி திராவிட மாணவர்களுக்கு விடுதியில் தங்குவதற்குப் போதுமான எண்ணிக்கையில் இடம் இல்லாத காரணத்தினாலே, போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களிலிருந்து வரும் மாணவர்கள் அந்த விடுதிகளுக்கு மனு செய்கின்றபோது இடமில்லை என்று சொல்கின்ற நிலை இருக்கின்றது. ஆகவே, இடவசதியினை கூடுதலாக்கி, மாணவர்களைச் சேர்ப்பதற்கான எண்ணிக்கையை உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று கடந்த இரண்டாண்டுகளில் கூடுதலாக 2000 இடங்களை, ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். அதில் குறிப்பாக கடந்த இரண்டாண்டுகளில் திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் பள்ளி மாணவர்கள் விடுதிகளில்

2008 நவம்பர் 12]

50 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. கல்லூரி விடுதிகளில் 10 கூடுதல் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதேபோல, திருவாரூரில் கல்லூரி மாணவர் விடுதி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. திருவாரூரில், களப்பாலில் பள்ளி மாணவர் விடுதியும், புத்தகரத்தில் பள்ளி மாணவர் விடுதியும் தொடங்கப்பட்டுள்ளன. சவளக்காரனில் புதிய பள்ளி மாணவர் விடுதி இந்த ஆண்டு தொடங்கப்படவுள்ளது. அதேபோல, நாகப்பட்டினம் மாவட்டத்தில் கல்லூரி மாணவர் விடுதியில் கூடுதலாக 10 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாதானத்தில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி இந்த ஆண்டு தொடங்கப்படவுள்ளது. எனவே, கூடுதலாக மாணவ மாணவியர்கள் இம்மாவட்டங்களில் உள்ள விடுதிகளில் தங்கிப் பயில, கல்விப் பணியில் ஆர்வம் கொண்டுள்ள நமது முதல்வர் அவர்களால் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில், பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி உள்ளது. அங்கே ஆதி திராவிட மாணவ மாணவியர்கள் சேர வேண்டுமென்றால் அந்த விடுதியில் காலியாக உள்ள இடங்களில்தான் சேர்க்கிறார்கள். ஆகவே, முத்துப்பேட்டையில் தனியாக ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கு விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவை மற்றும் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு நிதிநிலையைப் பொறுத்து எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]